## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 120 /2022**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சங்கர் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஏழுமலை | சமயம் | : |
| கிராமம் | : பொற்குணம் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 49 |

தேதி06.10.2023

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. அசோக்குமார் Gr.1 - 2511 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் பொற்குணம் கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி சேட்டு, ஏழுமலை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தான் என்னை அடித்தவர்.

2. சிங்வரம் எரியை மண்ணூர் கிராமத்தை சேர்ந்த சேட்டு என்ற தலைவர் ஏலம் எடுத்திருந்தார் மேற்படி ஏரிக்கு மீன் யாரும் பிடிக்காமல் இருப்பதறகாக காவலுக்கு இருந்தேன். கடந்த 30.06.2022 ம் தேதி மாலை 4.00 மணி அளவில் மேற்படி ஏரியில் ஒரு பகுதியில் பள்ளம் போட்யிருந்தேன். அதற்காக அங்க கடப்பாறையும் மம்முட்டியும் இருந்தது. அந்தநேரத்தில் அங்கு வந்த ஆஜர் எதிரி முருகன் அங்கு இருந்த கடப்பாறையை எடுத்து ஓத்தா தெவிடியா பையா என்று சொல்லி இங்க என்ன மீன் பிடிக்கிறீர்கள் என்று கடப்பாறையால் தூக்கி அடித்தார். அய்யோ அய்யோ என்று ஏன் அடிக்கிறாய் என்று கேட்டபோது மீண்டும் கடப்பாறை தூக்கி வலது காலில் மீது கடப்பாறையால் குத்திவிட்டார். ரத்தம் கொட்டியது. என்னால் வலி தாங்கமுடியாமல் அய்யோ அம்மா என்று கத்தினேன். அதன் பிறகு சேட்டும் ஏழுமலையும் வந்து என்னை காரில் செஞ்சிஅ ரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் வந்து எப்படி அடிப்பட்டது என்று விசாரணை செய்தார்கள். செஞ்சி அரச மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சை எடுத்த நிலயில்

சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் 1 மாதம் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றேன். எனது காலில் ஸ்கேன் , எக்ஸ்ரே எடுத்தார்கள். அடிப்பட்ட பகுதியில் பிளேட் வைத்தார்கள். இன்னும் பிளேட் எடுக்காமல் இருக்கிறேன். மருத்துவமனைக்கு சென்று பிளேட் எடுப்பது சம்மந்தமாககேட்டதுக்கு இன்னும் 3 மாதம் முடிந்தபிறகுதான் பரிசோதிக்கவேண்டும் மருத்துவர்கள் கூறினார்கள். எனக்கு காயம்பட்ட இடத்தில் தற்போது சீவு வருகிறது. காயம்பட்டதனால் என்னால் சரியாக நடக்கமுடியவில்லை. கால் நொண்டிதான் நடக்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் என்னைவிசாரித்தார்கள்.

**(1. 30.06.2022 தேதியிட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டது)**

**குறுக்குவிசாரணை:**

3. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.